[டாக்டர் க. பொன்முடி] [2008 மே 14

இங்கே உரையாற்றுகிறபொழுது, அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் (Government Polytechnics) பயில்கிற மாணவர்களுக்கு கல்விக் கட்டணத்தை இரத்துச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களும் அதற்கு அனுமதியளித்து, 2008-2009 ஆம் கல்வியாண்டு முதல் அந்த மாணவர்களுக்கான கல்விக் கட்டணம் ரூ.2,500 இரத்து செய்யப்படுகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு முதல்வர் அவர்களின்சார்பாக மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்புக்கு தமிழ்நாடு முழுவதிலும் இந்தப் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலக்கூடிய மாணவர்கள், பெற்றோர்களின் சார்பில் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-10

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஏ) பேரவைக் குழுக்களுக்கான உறுப்பினர்கள் தேர்வு

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மதிப்பீட்டுக் குழு. 2008-2009 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு (Committee on Estimates) பேரவையின் 16 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். கீழ்க்காணும் 16 உறுப்பினர்களிடமிருந்து முறையான வேட்புத் தாள்கள் வரப்பெற்றுள்ளன:

திரு. மு. அப்பாவு

செல்வி ஆ. அங்கையற்கண்ணி

திரு. தா. உதயசூரியன்

திரு. இ.ஏ.பி. சிவாஜி

திரு. அ. தமிழரசு

திரு. ஆர். சின்னசாமி

திரு. கோ. அரி

திரு. போ. சின்னப்பன்

திரு. ல. ராதாகிருஷ்ணன்

திரு. எஸ். ஜான் ஜேக்கப்

திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்

திரு. போளூர் ம. வரதன்

திரு. வே. மாரிமுத்து

திரு. வை. சிவபுண்ணியம்

திரு. ஆர். ஞானதாஸ்

டாக்டர் ஆஸ்கார் சி. நிக்லி

ஏற்கக்கூடிய வேட்பு மனுக்கள் அளித்துள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை, தேர்ந்தெடுக்கப்பெறவேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால் 2008-2009 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். தவிர, நிதித் துறைக்குப் பொறுப்பு வகிப்பவர் என்கிற முறையில், மாண்புமிகு நிதி அமைச்சர், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவார்கள்.

பேரவை விதி 196-ன்கீழ், திரு. மு. அப்பாவு அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) பொதுக் கணக்குக் குழு

2008-2009 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவிற்கு (Committee on Public Accounts) பேரவையின் 16 உறுப்பினர்களைத்

தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் 16 உறுப்பினர்களிடமிருந்து முறையான வேட்புத் தாள்கள் வரப்பெற்றுள்ளன:

திரு. டி. செங்குட்டுவன்

திரு. எஸ்.ஆர். இராஜா

திரு. கோ. ஐயப்பன்

திரு. என். மாலைராஜா

திரு. கோ. எதிரொலி மணியன்

முனைவர் மு. தம்பிதுரை

திரு. வே. செந்தில் பாலாஜி

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்

திரு. பி. தங்கமணி

திருமதி டி. யசோதா

திரு. அருள் அன்பரசு

திரு. மா. தண்டபாணி

திருமதி ரா. லீமா ரோஸ்

திரு. சு. குணசேகரன்

திரு. வீர. இளவரசன்

திரு. து. ரவிக்குமார்

ஏற்கக்கூடிய வேட்பு மனுக்கள் அளித்துள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை, தேர்ந்தெடுக்கப்பெறவேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 2008-2009 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கிறேன்.

தவிர, நிதித் துறைக்குப் பொறுப்பு வகிப்பவர் என்ற முறையில், மாண்புமிகு நிதி அமைச்சர், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் ஆகியோர் தங்களது அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவார்கள்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2008 மே 14] [பேரவைத் தலைவர்]

பேரவை விதி 204-ன்கீழ், திருமதி டி. யசோதா அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) பொது நிறுவனங்கள் குழு

2008-2009 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவிற்கு (Committee on Public Undertakings) பேரவையின் 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் பதினாறு உறுப்பினர்களிடமிருந்து முறையான வேட்புத் தாள்கள் வரப்பெற்றுள்ளன:

திரு. உதயம் சண்முகம்

திரு. கே.பி. இராமசுவாமி

திரு. எம். அன்பழகன்

திரு. ம. இராஜ்குமார்

திரு. பெ. காமராஜ்

திரு. க. சுந்தர்

திரு. தி. வேல்முருகன்

திரு. சொ. கருப்பசாமி

திரு. ஆ. அருண்மொழிதேவன்

திரு. சி.வி. சண்முகம்

திரு. வி.பி. கலைராஜன்

திருமதி ராணி வெங்கடேசன்

திரு. மா. ராஜசேகரன்

திரு. பா. வேல்துரை

திரு. கி. ஆறுமுகம்

திரு. டி. இராமச்சந்திரன்

ஏற்கக்கூடிய வேட்பு மனுக்கள் அளித்துள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை, தேர்ந்தெடுக்கப்பெறவேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 2008-2009 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப் பெற்றதாக அறிவிக்கிறேன்.

தவிர, மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவார்கள்.

பேரவை விதி 213-ன்கீழ் திரு. கி. ஆறுமுகம் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஈ) அவை உரிமைக் குழு

2008-2009 ஆம் ஆண்டிற்கான அவை உரிமைக் குழுவிற்கு (Committee of Privileges) பேரவையின் 14 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் பதினான்கு உறுப்பினர்களிடமிருந்து முறையான வேட்புத் தாள்கள் பெறப்பட்டுள்ளன:

திரு. கு. பிச்சாண்டி

திரு. வ. முல்லைவேந்தன்

திரு. பி.என். பெரியண்ணன்

திரு. ச. லட்சுமணன்

திரு. கூ.ந. சேகரன்

திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரி நாராயணன்

திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்

திரு. பி.கே. சேகர்பாபு

திரு. இரா. விசுவநாதன்

திரு. டி. ஜெயக்குமார்

திரு. சி. ஞானசேகரன்

2008 மே 14] [பேரவைத் தலைவர்]

திரு. எஸ். ராஜகுமார்

திரு. கே. மகேந்திரன்

திரு. எஸ். இராசசேகரன்

ஏற்கக்கூடிய வேட்பு மனுக்கள் அளித்துள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை, தேர்ந்தெடுக்கப்பெறவேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 2008-2009 ஆம் ஆண்டிற்கான அவை உரிமைக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கிறேன்.

தவிர, மாண்புமிகு பேரவை முன்னவர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

பேரவை விதி 227(3)-ன்கீழ், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இக்குழுவின் தலைவராக இருப்பார். (மேசையைத் தட்டும் ஒலி)

மற்ற குழுக்களுக்கான உறுப்பினர்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

பிற்பகல் 2-15

10. பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்களே, எல்லோருக்கும் வணக்கம்.

பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவையின் ஏழாவது கூட்டத் தொடர் 2008 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 23 ஆம் நாள் தொடங்கி பிப்ரவரித் திங்கள் 1 ஆம் நாள் வரையிலும், எட்டாவது கூட்டத் தொடர் மார்ச் திங்கள் 19 ஆம் நாள் தொடங்கி மே திங்கள் 14 ஆம் நாள் (இன்று) வரையிலும் நடைபெற்றது. இந்த இரண்டு கூட்டத் தொடர்களில் பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் பற்றிய விவரம் வருமாறு: